# நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

## மேட்டூர் நகராட்சி

நிகழும் குரோதி வருடம் ஆனி மாதம் 17ம் தேதி ஆங்கில ஆண்டு 01.07.2024ம் தேதி திங்கள் கிழமை காலை 10.00 மணிக்கு மேட்டூர் நகர்மன்றத்தில் சிறப்பு கூட்டம் நடைபெற உள்ளதால் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

நாள் : 28.06.2024 நகர்மன்ற தலைவர்
இடம் :மேட்டூர் அணை மேட்டூர் நகராட்சி

**மன்றபொருள்**

1. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA2) துறை, அரசாணை (Ms) எண்.82, நாள்.23.08.2018ன் படி மேட்டூர் நகராட்சிக்கு IUDM 2018–2019–ம் திட்டத்தின் கீழ் நகராட்சி பகுதியில் விடுபட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை அமைக்கும் பணிக்காக ரூ.978.00 இலட்சம் மதிப்பீட்டிற்க்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு ஒப்பந்தபுள்ளிகள் கோரி வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள **M/s.A.R Construction** என்ற நிறுவனத்திற்கு 29.11.2019 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டது. மேற்படி பணியினை 12 மாத காலத்துக்குள் முடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பணியினை மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரர் குறிப்பிட்ட காலத்திற்குள் பணி முடிக்காமல் காலம் தாழ்த்திய காரணத்தாலும் அதற்கு பல்வேறு காரணங்களையும் தெரிவித்து கேட்டுக்கொண்டதாலும் அவருடைய வேண்டுகோளுக்குகிணங்க (EOT) 27.11.2020, 26.11.2021, 28.11.2022 மற்றும் 27.02.2023 தேதிகளில் ஒப்பந்த காலநீட்டிப்பு செய்யப்பட்டது. இறுதியாக ஒப்பந்ததாருக்கு 31.12.2023 வரை ஒப்பந்த காலநீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆனாலும் இன்று வரையில் மேற்படி பணி முழுமையாக முடிக்கபடாமல், 30% மட்டுமே பணி முடிக்கப்பட்டுள்ளது.

மேலும் பணியினை விரைவில் முடிக்க கோரி மேற்படி ஒப்பந்ததாரருக்கு இவ்வலுவலகம் மூலம் 30.12.2019, 30.06.2020, 07.05.2021, 21.06.2021, 18.04.2022, 02.08.2022, 15.12.2022, 20.01.2023, 09.10.2023, மற்றும் 16.05.2024 ஆகிய தேதிகளில் அறிவிப்புகள் வழங்கப்பட்டுள்ளது. 16.05.2024அன்று வழங்கப்பட்ட அறிவிப்பில் பணியின் ஒப்பந்தத்தை ரத்து செய்து ஒப்பந்தாரரை கருப்பு பட்டியலில் சேர்க்கப்படும் எனவும் பணியை உடனடியாக துவங்கி முடிக்கவும் இறுதி அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி இறுதி அறிவிப்பிற்கு ஒப்பந்ததாரர் பணிக்கான ஒப்பந்தத்தை ரத்து செய்து தருமாறும், இப்பணி 2018–2019–ம் ஆண்டு பணி துவங்கப்பட்ட நிலையில் தற்போது கட்டுமானப் பொருட்களின் விலை அதிகப்படியாக உள்ளதால் மேற்படி பணியை தொடர்ந்து செய்ய இயலவில்லை எனவும் தனது 14.03.2024–ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

மேற்படி திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட ரூ.978.00 இலட்சம் மதிப்பீட்டில் நாளது தேதி வரையில் 30% பணி மேற்கொள்ளப்பட்டதற்கு பட்டியல் தொகை ரூ.274.27 இலட்சம் ஒப்பந்தாருக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி திட்டத்தின் கீழ் மீதமுள்ள தொகை ரூ.703.73 இலட்சம் ஆகும். எனவே ஒப்பந்தாருக்கு பணிக்காக வழங்கப்பட்ட பட்டியலில் வைப்பு தொகை (Security Deposit) 1% தொகை ரூ.9.78 இலட்சம், (EMD) டேவணித் தொகை ரூ.9.78இலட்சம் Withheld Amount 5% தொகை ரூ.13.71 இலட்சம் ஆக மொத்தம் தொகை ரூ.33.27 இலட்சங்கள் பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. மேலும் கூடுதலாக Withheld Amount 2% தொகை ரூ.5.48 இலட்சம் ஒப்பந்தாரரிடமிருந்து Workdone Value –க்கு பிடித்தம் செய்யப்பட்டுள்ளது.

மேலும் ஒப்பந்ததாரர் பணி மேற்கொண்டதற்கு உத்தேசமாக தொகை ரூ.10.00இலட்சம் பட்டியல் வழங்கவேண்டியுள்ளது.

மேற்படி திட்டபணிக்காக ஒப்பந்தாரருக்கு வழங்கப்பட வேண்டிய தொகை மற்றும் பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகை விபரம் கீழ்கண்டுள்ளவாறு.

| அ) | வ.எண் | ஒப்பந்தாரர் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள தொகை விவரம் | தொகை ரூ.(இலட்சத்தில்) |
|---|---|---|---|
| | 1. | திட்டத்திற்கான மதிப்பீட்டுத் தொகை | ரூ.978.00 |
| | 2. | இது நாள் வரையில் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட தொகை | ரூ.274.27 |
| | 3. | மீதமுள்ள தொகை | ரூ.703.73 |
| ஆ) | | ஒப்பந்ததாரரிடம் பிடித்தம் செய்யப்பட்டுள்ள தொகையின் விவரம் | |
| | 1. | டேவணித் தொகை 1% | 9.78 |
| | 2. | கூடுதல் வைப்பு தொகை 1% | 9.78 |
| | 3. | பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை 5% | 13.71 |
| | 4. | கூடுதலாக பிடித்தம் செய்யப்பட்ட தொகை 2% | 5.48 |
| | 4. | ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட வேண்டிய பில் பட்டியல் தொகை | 10.00 |
| | | மொத்தம் | 48.75 |
| | | ஆக மொத்தம் (அ+ஆ) | 752.48 |

எனவே மேற்படி திட்டப்பணி துவங்கி 4 ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் ஒப்பந்த நிறுவனம் பணியை முடிக்கமால் காலதாமதம் செய்து வருவதாலும் , தன்னால் இப்பணியை செய்ய இயலாது என கடிதம் அளித்துள்ளதாலும் மேற்படி பணிக்கான ஒப்பந்தத்தை ரத்து செய்து, மீதமுள்ள பணியை தற்போது உள்ள புதிய செந்தாரப்பட்டியல் விலை விகிதத்தில் திருத்திய மதிப்பீடு கீழ்க்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.(இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | விடுபட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை அமைத்தல் | 845.54 |
| 2. | GST 18% | 152.20 |
| 3. | Labour Welfar Fund 1% | 10.20 |
| 4. | L.S | 12.06 |
| | **மொத்தம்** | **1020.00** |

| வ.எண் | அசல் மதிப்பீட்டு தொகை ரூ. (இலட்சத்தில்) | மீதமுள்ள தொகை ரூ. (இலட்சத்தில்) | திருத்திய மதிப்பீடு ரூ. (இலட்சத்தில்) | கூடுதல் மானிய தொகை (1020.00 – 703.73) ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1. | 978.00 | 703.74 | 1020.00 | 316.27 |

மேலும் மேற்படி திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட நிதியில் மீதமுள்ள தொகை ரூ.703.73 இலட்சம் மற்றும் ஒப்பந்த நிறுவனத்திற்கு வழங்கப்பட வேண்டிய தொகை ரூ.48.75 இலட்சம் சேர்த்து மொத்தம் ரூ.752.48 இலட்சம் போக மீதமுள்ள தொகை ரூ.267.52 இலட்சம் அரசு நிதியிலிருந்து மானியமாக வழங்கததக்க வகையில் ரூ. 1020.00 இலட்சம் திருத்திய மதிப்பீட்டிலான பணிக்கு விரிவான திட்டஅறிக்கை தயார் செய்து அனுப்பி திருத்திய நிர்வாக அனுமதி கோருவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி திட்டபணியின் அவசரம் அசியிம் கருதி திருத்திய மதிப்பீடு தயார் செய்து கருத்துரு சமர்ப்பிக்கவும் கூடுதலான தொகை ரூ.267.52 இலட்சம் அரசு நிதியிலிருந்து மானியமாக வழங்க மன்றம் கோரலாம்.

**(ந.க.எண்.2857/2018/இ1)**

**தீர்மான எண்.530 நாள்.01.07.2024**

**அனுமதிக்கப்பட்டது.**

2. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகளில் மேட்டூர் நகராட்சிக்கு TUFIDCO கடன் (வட்டி இல்லா கடன்) திட்டத்தின் கீழ் நகராட்சி பகுதியில் பாதாள சாக்கடை திட்டத்தில் வீட்டு கழிநீர் இணைப்புகள் 10,000 இணைப்புகள் (8800 +1200) வழங்குதல் பணிக்காக இரண்டு பணிகளுக்கு சேர்த்து ரூ.690.00 இலட்சம் (600+90) மதிப்பீட்டிற்க்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் செயல்முறைகளில் தொழில்நுட்ப அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி பணிகளுக்கு ஒப்பந்தபுள்ளிகள் கோரி வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் **M/s.Andavar Construction** அவர்களுக்கு இரண்டு பணிகளுக்கும் மேட்டூர் நகராட்சி பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிகளை 12 மாத காலத்துக்குள் முடிக்கப்படத்தக்க வகையில் 29.11.2019 அன்று ஒப்பந்த பத்திரம் பதிவு செய்யப்பட்டதன்படி பணி முடிக்கப்பட வேண்டிய நாள் 29.11.2020 ஆகும்.

மேற்படி பணிகளை மேற்கொண்டு வரும் ஒப்பந்ததாரர் குறிப்பிட்ட காலத்திற்குள் பணி முடிக்காமல் காலம் தாழ்த்திய காரணத்தாலும் அதற்கு பல்வேறு காரணங்களையும் தெரிவித்து கேட்டுக்கொண்டதாலும் அவருடைய வேண்டுகோளுக்குகிணங்க (EOT) 26.11.2019, 26.11.2020, 26.11.2021 மற்றும் 26.11.2022 தேதிகளில் ஒப்பந்த காலநீட்டிப்பு செய்யப்பட்டது. இறுதியாக ஒப்பந்ததாரருக்கு 26.11.2023 வரை ஒப்பந்த காலநீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆனாலும் இன்று வரையில் மேற்படி பணி முழுமையாக முடிக்கபடாமல் 47% மட்டுமே பணி முடிக்கப்பட்டுள்ளது.

மேலும் பணியினை விரைவில் முடிக்க கோரி மேற்படி ஒப்பந்ததாரருக்கு இவ்வலுவலகம் மூலம் 27.05.2019, 29.08.2019, 20.09.2020, 07.05.2021 மற்றும் 10.10.2023, ஆகிய தேதிகளில் அறிவிப்புகள் வழங்கப்பட்டுள்ளது. 10.10.2023 அன்று வழங்கப்பட்ட அறிவிப்பில் பணியை உடனடியாக துவங்கி முடிக்கவும் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி இறுதி அறிவிப்பிற்கு மேற்படி ஒப்பந்ததாரர் பணிக்கான ஒப்பந்தத்தை ரத்து செய்து தருமாறும் தனது இரண்டு பணிகளுக்கும் ஒப்பந்தத்தை ரத்து செய்து தருமாறும், 2018–2019–ம் ஆண்டு பணி துவங்கப்பட்ட நிலையில் தற்போது கட்டுமானப் பொருட்களின் விலை அதிகப்படியாக உள்ளதால் மேற்படி பணியை தொடர்ந்து செய்ய இயலவில்லை. என தனது 18.04.2024–ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

**தற்போதுவரை பணி மேற்கொள்ளப்பட்ட விவரம் :–**

| வ. எண் | பணியின் விவரம் | பணிமுடிக்கப்பட்டுள்ள இணைப்புகளின் எண்ணிக்கை | நிலுவை |
|---|---|---|---|
| 1. | Internal plumbing 10000 no's | 4762 | 5238 |

மேற்படி திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட ரூ.6.90 இலட்சம் மதிப்பீட்டில் நாளது தேதி வரையில் 47% பணி மேற்கொள்ளப்பட்டதற்கு மேற்படி பணிக்கு ரூ.216.58 இலட்சங்களுக்கு செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. திட்டத்தின் கீழ் மீதமுள்ள தொகை ரூ.473.42 இலட்சம் ஆகும். ஒப்பந்தாரருக்கு வழங்கப்பட்ட பில் பட்டியல் தொகையில் பணிக்கான வைப்பு தொகை (Security Deposit) 1% ரூ.6.90 இலட்சம், டேவணித் தொகையாக (EMD) ரூ.6.90இலட்சம் Withheld Amount 10.83 இலட்சம் ஆக மொத்தம் தொகை ரூ.24.63 இலட்சம் பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. மேலும் ஒப்பந்ததாரர் பணி மேற்கொண்டதற்கு உத்தேசமாக தொகை ரூ.35.00 இலட்சம் பட்டியல் தொகை வழங்கவேண்டியுள்ளது.

இதுவரை ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட வேண்டிய தொகை மற்றும் பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகை விபரம் கீழ் வருமாறு. (இரண்டு பணிகளுக்கும் சேர்த்து)

| அ) | வ. எண் | ஒப்பந்ததாரர் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள தொகை விவரம் | தொகை ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| | 1. | திட்டத்திற்கான மதிப்பீட்டுத் தொகை | 690.00 |
| | 2. | இது நாள் வரையில் ஒப்பந்ததாரருக்கு | 216.58 |

| | | | |
|---|---|---|---|
| | | வழங்கப்பட்ட தொகை | |
| | 3. | **மீதமுள்ள தொகை** | 473.42 |
| **ஆ)** | | **ஒப்பந்ததாரரிடம் பிடித்தம் செய்யப்பட்டுள்ள தொகையின் விவரம்** | |
| | 1. | டேவணித் தொகை 1% | 6.90 |
| | 2. | கூடுதல் வைப்பு தொகை 1% | 6.90 |
| | 3. | பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை | 10.83 |
| | 3. | ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட வேண்டிய பில் பட்டியல் தொகை | 35.00 |
| | | மொத்தம் | 59.63 |
| | | ஆக மொத்தம் (அ+ஆ) | 533.05 |

எனவே மேற்படி இரண்டு பணிகளும் துவங்கி 5 ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் மேற்படி ஒப்பந்தாரர் பணிகளை முடிக்காமல் காலதாமதம் செய்து வருவதாலும், தன்னால் இப்பணிகளை செய்ய இயலாது என கடிதம் அளித்துள்ளதாலும் மேற்படி பணிகளுக்கான ஒப்பந்தத்தை ரத்து செய்து மீதமுள்ள பணியை தற்போது உள்ள புதிய செந்தாரப்பட்டியல் விலை விகிதத்தில் திருத்திய மதிப்பீடு கீழ்கண்டாவறு தயார் செய்யப்பட்டது.

| **வ.எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை (இலட்சத்தில்)** |
|---|---|---|
| 1. | விடுபட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை அமைத்தல் | 487.57 |
| 2. | GST 18% | 87.76 |
| 3. | Labour Welfar Fund 1% | 5.89 |
| 4. | L.S | 7.78 |
| | மொத்தம் | 589.00 |

| **வ. எண்** | **அசல் மதிப்பீட்டு தொகை ரூ.(இலட்சம்)** | **மீதமுள்ள தொகை ரூ.(இலட்சம்)** | **திருத்திய மதிப்பீடு/ இணைப்பு எண்ணிக்கை (5238) ரூ.(இலட்சம்)** | **கூடுதல் மானிய தொகை (589 – 473.42) ரூ.(இலட்சம்)** |
|---|---|---|---|---|
| 1. | 690.00 | 473.42 | 589.00 | 115.58 |

ஏற்கனவே திட்டத்தின் கீழ் மீதமுள்ள தொகையான ரூ. 473.42 இலட்சம் மற்றும் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட வேண்டிய தொகை ரூ59.63 இலட்சம் சேர்த்து மொத்தம் ரூ.533.05 இலட்சம் போக மீதமுள்ள தொகையான ரூ.55.95 இலட்சம் அரசு நிதியிலிருந்து மானியமாக வழங்கததக்க வகையில் திருத்திய நிர்வாக அனுமதி 589.00 இலட்சம் திருத்திய மதிப்பீட்டிலான பணிக்கு விரிவான திட்டஅறிக்கை தயார் செய்து அனுப்பி திருத்திய நிர்வாக அனுமதி கோருவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி திட்டபணியின் அவசரம் அசியிம் கருதி திருத்திய மதிப்பீடு தயார் செய்து கருத்துரு சமர்ப்பிக்கவும் கூடுதலான தொகை ரூ.55.95 இலட்சம் அரசு நிதியிலிருந்து மானியமாக வழங்க மன்றம் கோரலாம்.

**(ந.க.எண்.686/2018/இ1)**

**தீர்மான எண்.531 நாள்.01.07.2024**
**அனுமதிக்கப்பட்டது.**